சென்னை மியாட் மருத்துவமனையில்

# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு தினம்

## நடிகர் மிலிந்த் சோமன் கலந்து கொண்டார்



பெண்களுக்கான மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி சென்னை மியாட் மருத்துவமனையில் நடந்தது. அதில், பெண்கள் வரைந்த ஓவியம் பற்றி மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை மேலாண் இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் ஆகியோர் விளக்கம் அளித்த போது எடுத்தபடம். ஓவியர் ஷர்மிளா மோகன்தாஸ், மிலிந்த் சோமன் அருகில் உள்ளனர்.

சென்னை, மார்ச்.27–

சென்னை மியாட் மருத்துவமனையில் நடைபெற்ற பெண்கள் மட்டுமே பங்கேற்ற மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு தின நிகழ்ச்சியில் நடிகர் மிலிந்த் சோமன் கலந்து கொண்டார்.

### பெண்களால், பெண்களுக்காக

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு தினம் நேற்று சென்னை மியாட் மருத்துவமனையில் நடைபெற்றது. 'பின்கத்தான்' என்ற அமைப்பின் நிறுவனரும், நடிகருமான மிலிந்த் சோமன் தலைமை தாங்கினார். மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், பெண்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனைக்கான கூப்பன்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற மியாட் மருத்துவமனையின் இணை மேலாண் இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் கூறியதாவது:–

இந்த நிகழ்ச்சி முழுக்க முழுக்க பெண்களால் பெண்களுக்காக நடத்தப்பட்டது. பெண்களை கவுரவிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது.

### உடல் நலனில் கவனம்

காரணம் நம் சமுதாயத்தில் பெண்கள் சுயநலம் இன்றி குடும்ப உறுப்பினர்கள், அலுவலக பணிகள், மற்றும் இதர சமுதாய பொறுப்புகளில் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் தங்கள் உடல் நலனைப்பற்றி கவனமின்றி இருக்கிறார்கள். உடல் நலனை பற்றி அக்கறை கொள்வதில்லை.

பெண்கள் அவ்வப்போது உடலை பரிசோதனை செய்து கொள்ளவேண்டும். அவ்வாறு பரிசோதனை செய்தால் தான் உடல் நலனைப் பற்றி தெரிந்து கொண்டு அதற்கான வழி முறைகளை கடைப்பிடித்தால் வாழ்வில் முன்னேறலாம். பெண்களுக்கு எங்களால் இயன்ற மருத்துவ பரிசோதனையை வழங்குவதற்காக இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவுக்கு தலைமை தாங்கிய மிலிந்த் சோமன் கூறியதாவது:–

### விழிப்புணர்வு ஓட்டம்

பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்க்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வருகிற 13–ந்தேதி காலை 5.30 மணிக்கு சென்னையில் 'பின்கத்தான்' ஓட்டம் நடைபெற உள்ளது. இந்த ஓட்டம் 3 கிலோமீட்டர், 5 கிலோமீட்டர், 10 கிலோ மீட்டர் தூரம் என்ற நிலையில் நடைபெறும்.

இந்த ஓட்டத்தில் பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு சென்னையை புற்றுநோய் இல்லாத நகரமாக்கவும், இதற்கான முயற்சியில் நம் சென்னையை முதன்மையானதாகவும், முன்மாதிரி நகரமாக்கவும் நாம் முனைப்புடன் செயல்படவேண்டும். பெண்களுக்கும் தங்கள் உடல் நிலை குறித்த விழிப்புணர்வு ஏற்படுவதற்காக, ஓட்டத்தில் தவறாது கலந்துகொள்ள வேண்டு.

இவ்வாறு அவர் கூறினார்.

### தடுப்பாற்றல் கலை

இந்த நிகழ்ச்சியில், ஜப்பானில் புகழ் பெற்ற 'ஜகிடோ' என்ற தடுப்பாற்றல் கலையை மினோரி ஒகாவா சான் என்ற பெண்ணும், இந்தியாவில் இந்த கலையில் 'பிளாக் பெல்ட்' பெற்ற செந்தில்குமாரும் செய்து காண்பித்தனர்.

மேலும் ஷர்மிளா மோகன்தாஸ் உள்பட 4 ஓவியர்கள் இந்த நிகழ்ச்சியில் தங்கள் ஓவிய திறனை வெளிப்படுத்தினார்கள். விழாவில் கலந்து கொண்ட பல பெண்கள் தங்களுடைய புகைப்படத்துடன் கூடிய உடல் நலன் பற்றிய விழிப்புணர்வு தகவல்களை உடனடியாக பதிவு செய்து கொண்டனர்.